# PRESS NOTE

## FORMERLY FOREMAN (O&M), TNEB, KOVALAM AND FORMERLY COMMERCIAL INSPECTOR, TNEB, KOVALAM, CHENGALPATTU DISTRICT WERE CONVICTED FOR 2 YEARS of SIMPLE IMPRISONMENT FOR RECEIVING Rs.1,600/- AS BRIBE.

The Convicted accused Thiru M.I.Muneer Ahmed was working as Foreman from 04.08.2007 to 17.07.2009 and Thiru. A. Irudayaraj, S/o. was working as Commercial Inspector from 08.02.2007 to 17.07.2009 at O/o the Junior Engineer, (O&M), Tamilnadu Electricity Board, Kovalam, Chengalpattu.

The Complainant Tr.Pilal on 09.07.2009 at 14.00 hrs met the accused- Tr.Muneer Ahmed for getting new EB connection for his house and to do this work Tr.Muneer Ahmed demanded Rs.1,600/- for himself and for A-2 Tr. Irudayaraj Commercial Inspector.

Followed by this, the Complainant had preferred a complaint at DVAC on 17.07.2009 and a case in DVAC Hqrs Cr.No 29/2009 was registered and trap was laid. On 17.07.2009 at 15.10hrs when the complainant met the accused-A-1 he reiterated his earlier demand and accepted Rs.1,600/- and shared the same with A-2 Tr. Irudayaraj. Thereby both the accused committed an offence punishable under section 7 of Prevention of Corruption Act.1988. After materialising the trap, both accused were arrested and sent for remand.

After completion of investigation, Charge Sheet was laid before the Chief Judicial Magistrate Cum Special Judge, Chengalpet on 08.06.2011. Today (25.11.2024) the Hon'ble Chief Judicial Magistrate pronounced the Judgment in this case by convicting both the accused

Muneer Ahmed and Irudayaraj to undergo simple Imprisonment for 2 years and shall pay a fine of Rs.10,000/-, in default to undergo 1 months Simple Imprisonment for the offence committed u/s 7 of Prevention of Corruption Act, 1988 and to undergo Imprisonment for 2 years and shall pay a fine of Rs.10,000/- in default to undergo 1 months Simple Imprisonment for the offence committed u/s.13 (2) r/w. 13 (1) (d) of Prevention of Corruption Act, 1988 r/w 34 IPC, and to run the sentence concurrently.

## பத்திரிக்கை செய்தி

**லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக முன்னாள் கோவளம் மின் வாரிய அலுவலகத்தில் பணிபுரிந்த திரு. முனீர்அகமது, கம்பியாளர் மற்றும் திரு.இருதையராஜ் வணிக ஆய்வாளர் ஆகிய இருவருக்கும் தலா இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, செங்கல்பட்டு மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்புரை.**

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ள திரு.முனீர் அகமது, கம்பியாளர் 04.08.2007 முதல் 17.07.2009 வரையும் மற்றும் திரு.இருதயராஜ், வணிக ஆய்வாளர் 08.02.2007 to 17.07.2009 ஆகிய இருவரும் இளநிலை பொறியாளர் அலுவலகம், (இயக்குதலும் பாராமரித்தலும்) கோவளம் மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரிந்துள்ளனர்.

புகார்தாரர் திரு.பிலால் என்பவர் கடந்த 09.07.2009 அன்று மாலை 2 மணிக்கு எதிரி-1 திரு. முனீர்அகமதுவை சந்தித்து தன்னுடைய வீட்டிற்கு புதிய மின் இணைப்பு கொடுக்க வேண்டி கேட்டபொழுது திரு.முனீர் அகமது தனக்கும் எதிரி-2 திரு.இருதையராஜுக்கும் கையூட்டாக ரூ.1600/- கொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்.

புகார்தாரர் திரு.பிலால் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தினால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறப்பு புலனாய்வுக் குழுவில் 17.07.2009 அன்று புகார் கொடுத்தின் அடிப்படையில் குற்ற எண்.29/2009ல் வழக்கு பதிவு செய்து எதிரிகள் மீது பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 17.07.2009 அன்று மாலை 3.15 எதிரி-1 திரு.முனீர்அகமது சந்தித்த போது அவர் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.1600/-ஐ மீண்டும் கேட்டு பெற்று அந்த பணத்தை எதிரி-2 இருதயராஜுடன் பகிர்ந்துக்கொண்டார். எனவே எதிரிகள் இருவரும் லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் 08.06.2011 அன்று செங்கல்பட்டு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகள் திரு.முனீர் அகமது மற்றும் திரு.இருதயராஜ் ஆகியோருக்கு சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் இரண்டு ஆண்டுகள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 1 மாதகாலம் சிறைத்தண்டனையும் மற்றும் u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988 r/w 34 IPC-ன் படி 2 ஆண்டுகள் மெய்க்காவல் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 1 மாதகாலம் சிறைத்தண்டனையும் விதித்து இன்று 25.11.2024 இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.